# குற்றமும் தண்டனையும் பற்றிய விவாதங்கள்

Journal of Social Review
Volume 5 (1)
June 2018
Department of
Social Sciences

றியால். ஏ.எல்.எம்.

## ஆய்வுச் சுருக்கம்

*மனிதன் தோன்றி வளர்ந்த காலம் முதலே குற்றம் என்பதுவும் தோன்றி விட்டது. குற்றம் என்பது ஒரு செயலாகவும் இருக்கலாம் அல்லது செயலை செய்யத் தவறியதாகவும் இருக்கலாம். மேற்படி இரண்டும் பொதுச் சட்ட திட்டங்களுக்கு எதிரானதாக இருக்கும். இதனை நேரடியாக செய்வதும் செய்யச் சொல்லுவதும் குற்றம் எனப்படும். இந்தக் குற்றங்களை சட்டத்தில் குற்றம் என்று குறிப்பிட்டு தண்டனை வழங்க வேண்டும் என்ற நியதி உண்டாக்கப்பட்டுள்ளது. இத்தகைய தண்டனை இன்றைய சமூக பொருளாதார வளர்ச்சிக்கு ஏற்புடையதாக இருக்க வேண்டும். மனிதன் தன்னுடைய தேவையைப் பூர்த்தி செய்யும் பொருட்டு செயல்படும் பொழுது அதில் ஏற்படும் தடைகளை விலக்க முற்படுகின்றான். அது சில வேளைகளில் குற்றச் செயலாக அமைகிறது. சில வேளைகளில் குற்றம் என அறியாமலே குற்றம் புரிந்து விடுகிறான். அது பிறருக்குப் பாதிப்பை ஏற்படுத்த வாய்ப்பாகின்றது. சமூகத்தில் நிகழும் பல்வேறு நிகழ்வுகளில் குற்றம் என்றால் என்ன? எவை குற்றம்? அதற்கான தண்டனைகள் என்ன? போன்ற குற்றம் பற்றிய பொதுவான பார்வையை எடுத்தியம்புவது இக்கட்டுரையின் நோக்கமாகும். இவ்வாய்வினைச் சரியான முறையில் மேற்கொள்வதற்கு பின்வரும் ஆய்வு முறையியல்கள் பயன்படுத்தப்படுகின்றன. குறிப்பாக, குற்றம் தண்டனை தொடர்பான கோட்பாடுகளுக்கிடையேயுள்ள தொடர்புகளை விளக்குவதற்கு ஒப்பியல் ஆய்வு முறை, விபரண முறையியல் என்பன பயன்படுத்தப்படுவதோடு இவ்வாய்வுக்குரிய தரவுகளாக, சண்முகசுப்பிரமணியம் எழுதிய 'குற்ற இயல் சட்டம்' என்ற நூலை பிரதானமாகவும், குற்றம் தண்டனை தொடர்பில் விவாதிக்கும் ஆய்வுக் கட்டுரைகள், என்பனவற்றிலிருந்து பெறப்பட்டு இக்கட்டுரை வடிவமைக்கப்பட்டுள்ளது. குற்றம் என்ற சொல்லிலேயே தண்டனை என்ற பொருளும் கலந்திருக்கின்றது என்பதை விளக்குவதற்கும் மீள் மதிப்பீடு செய்வதற்கும் இக்கட்டுரை முயல்கின்றது.*

## அறிமுகம்

சமுதாயத்திற்குத் தீங்கு விளைவிக்கக் கூடிய வகையில், சட்டத்திற்குப் புறம்பாகத் தனி மனிதனுக்கோ, சமுதாயத்திற்கு எதிராகவோ செய்யப்படுவது குற்றம் எனப்படும். பிழை, தவறு, குறை, பழி, பாவம், குற்றம் என்ற சொற்களை நாம் ஒரே பொருளைக் குறிக்கும் வகையில் சாதாரணமாகப் யன்படுத்துகிறோம்.

ஆனால் குற்றம் என்ற சொல் சட்டத்தில் தனிப் பொருளுடையது. சட்டத்தால் விலக்கப்பட்ட செயல், சட்டப்படி தண்டனைக்குரிய செயல்களே குற்றங்கள் ஆகின்றன. குற்றச் செயல்களில் பல தனிநபர்களின் உரிமைகளைப் பாதிக்கும் தீங்கு களாகவும் இருக்கலாம், தீங்கு இல்லாமலும் இருக்கலாம். ஆனால் குற்றங்கள் எல்லாம் சமூகத்திற்கும், தீங்கு விளைவிப்பனவாகவே இருக்கின்றன. எந்த நடத்தை சமூக வாழ்க்கைக்கு விரோதமான நடத்தையோ அதனைத் தண்டிக்க அரசாங்கத்தினால் விதி விலக்குகள் செய்யப்படுகின்றன. அதாவது சட்டத்தால் தண்டிக்கப்படும் நடத்தையைக் குற்றம் எனலாம் (சிங்கார வேலனார், 2001,ப.5).

குற்றம் என்ற சொல் ஆங்கிலத்தில் 'Crime' என வழங்கப்படுகிறது. Crime என்ற வார்த்தை 'கிரிமா' (krima) என்ற கிரேக்கச் சொல்லிலிருந்து ஆரம்பமானது. இது 'சமூக முறை' என்ற பொருள் கொண்டது. இவ்வாறாக Crime என்ற வார்த்தை குடும்பத்திற்கோ குழுவிற்கோ சமுதாயத்திற்கோ ஒவ்வாத, எதிரான, அல்லது சமுதாயத்தால் ஒதுக்கப்பட்ட, புறக்கணிக்கப் பட்ட அல்லது சமுதாயத்தால் தடுக்கப்பட்ட செயல்களை மற்றும் கடுமையான கண்டனத்திற்கு உரிய செயல்களுக்கு உபயோகிக்கப்பட்டதாகும்.

குற்ற நடவடிக்கைகளில் உள்ள குணாதிசயங்கள்,

1. வெளிப்படையானது: சமூகத்திற்குத் தீங்கு விளைவிக்கக் கூடியது, தனிப்பட்டது, கோப தாபங்களுடன் கூடியது, அறிவுடன் சம்மந்தப்பட்டது.
2. செயல் வடிவமானது : ஒரு செயலால் செய்திருக்கலாம் அல்லது செய்ய வேண்டியவை செய்யாமல் ஒதுங்கி இருக்கலாம்.
3. உள் நோக்கமுடையது : குற்றத்தின் ஒரு நோக்கம் அல்லது தெளிவு அல்லது காரணம் இருத்தல் வேண்டும்.

குற்றம் புரிவதற்கான காரணங்களை இரு பிரிவுகளாக நோக்கலாம்.

1. குற்றம் புரிய அகநிலையான காரணங்கள்:
   அ. வம்சப் பாரம்பரிய மாற்றம்
   ஆ. புத்தி சுவாதீனம் அற்ற நிலைமை.

2. புறநிலையான காரணங்களின் படி குற்றக்காரணங்கள்:
அ. சமூகப் பொருளாதார ரீதியானது
ஆ. சுற்றுப்புறச் சூழல் ரீதியானது
இ. பண்பாட்டுச் சூழல் ரீதியானது.

லோம்ரோசோ (Cesare Lombroso, 1835 – 1909), என்பவரின் வம்சப் பாரம்பரியம் குற்றத்தோடு சம்பந்தப்பட்டது. பிறப்பின் வழியால் சில குற்றங்கள் நடக்கின்றன என்று இதனால் முன்வைக்கப்பட்டது. இதைத்தான் Atavist அல்லது Heredity என்றார்கள். இந்த முறையில் ஒன்றாகப் பிறந்த இரட்டைப் பிள்ளைகளைத் தனித்தனியாக வளர்த்து அவர்களின் மாறுபட்ட

குணாதிசியங்களைக் காண்பித்தனர். சுற்றுபுறச் சூழலால் நடத்தை மாறுபட்டது என்று நிரூபிக்கப் பட்டது. ஜிப்சி இனத்தவர்களின் குடும்பச் சூழ்நிலை இதற்கு பெரிதும் உறுதுணையாக இருந்தது. பழங்குடி இனத்தவர்களும் இங்கு குறிப்பிடத் தக்கவர்கள். இவர்கள் மூடநம்பிக்கை பில்லி சூனியத்தில் நம்பிக்கை வைத்து சண்டை இடுவது, பாலியல் குற்றங்கள் செய்வது, போதைக்கு அடிமையாவது போன்றவற்றால் வம்சப் பாரம்பரிய குற்றத்தைக் கண்டுகொள்ள முடிகிறது.

புத்திசுவாதீனம் அற்றவர்கள் எந்த ஒரு காரணத்திற்காகக் குற்றம் புரிந்தாலும் அது குற்றமாகாது. டானியல் எம். நாக்டன் (Daniel N.Naghten) ஒரு அரசியல் பைத்தியகாரன், அவன் 1843 இல் ஒரு பிரிட்டிஷ் பிரதமரைக் கொல்ல நினைத்து அமைச்சரின் உதவியாளரைக் கொன்றான். மது போதையில் வீதிப் போக்குவரத்து குற்றங்கள் செய்வதை நாம் காணமுடிகிறது. சில பெண்களும் கருக் கலைப்புக் குற்றங்களைப் புரிகின்றார்கள். இதற்கெல்லாம் உடற்கூறுகளும் இயற்கையாக அமையும் சூழ்நிலைகளும் காரணம் என்று கண்டு கொள்ளப் பட்டிருக்கிறது. போதிய அறிவு இல்லாதவர்கள் கொடூர புத்தி உள்ளவர்களாகவும் சமூக விரோத போக்கைக் கொண்டவர்கள் சிற்றின்ப வேட்கையில் அதிகம் திளைத்தவர்களும் இன்னும் சிலரும் குற்றம் புரியக் காரணமாக உள்ளனர்.

1. கெட்ட நடத்தையுடைய நண்பர்கள் சமூக விரோத, கீழான செயல்களைச் செய்யும் கூட்டத்தினருடன் பழகுவதாலும், அவர்களோடு சேர்ந்து விடுவதாலும், அதே எண்ணம் தோன்றி குற்றம் புரிகின்றனர்.
2. காம உணர்வைத் தூண்டும் திரைப்படங்கள், தொலைக்காட்சி நிகழ்ச்சிகள், ஆபாசப் புத்தகங்கள் போன்றவை ஏராளமாகப் பெருகி விட்டதாலும் அவற்றைப் பார்ப்பவர்களின் பாலியல் உணர்ச்சி தட்டி எழுப்பப்பட்டு குற்றம் புரியத் தூண்டுகின்றன.
3. சமுகத்தால் புறக்கணிக்கப்பட்ட ஒருவன் மனதில் குற்ற உணர்வு நிரந்தரமாகத் தங்கி விடுகிறது. இப்படிப்பட்ட சூழ்நிலைகளால் அவன் குற்றம் புரியத் தூண்டப்படுகிறான்.
4. தங்கள் குழந்தைகளைச் சரிவர கவனிக்க இயலாத பெற்றோர்களால் குழந்தைகள் நெறிதவறி விடுகின்றனர்.

பொதுவாகக் குற்றம் பெருக முக்கிய காரணமாகப் படிப்பறிவு அதிகமில்லாத சமூகம் மற்றும் படித்திருந்தாலும் உலக அனுபவம் எதுவுமில்லாத இளைய சமுதாயம், பெருகி வரும் வேலையில்லாத் திண்டாட்டம், குற்றத்தினை மறைத்துத் தப்பித்துக் கொள்ளுதல், குறைந்த தண்டனை வழங்குதல் போன்றவற்றைக் கூறலாம்.

பொதுவாக இன்றைய நாகரீகச் சூழலில் மக்களில் சிலர் உடல் உழைப்புக்கு அதிக முக்கியத்துவம் கொடுப்பதில்லை.

கடின உழைப்பின்றி குறுகிய காலகட்டத்தில் பெரும் பணக்காரனாக வாழ்வது எப்படி என்று சிந்திக்கின்றனர். அதன் விளைவாகக் குறுக்கு வழியில் பணம் சம்பாதிக்க முயலுகின்றனர். துணைக்கு வறுமையில் வாடும் ஒரு சிலரைச் சேர்த்துக் கொள்கின்றனர். நடைபிணமாய் வாழ்ந்து பட்டினி தான் மிஞ்சியது, தான் வறுமையில் வாடிய போது யாரும் உதவவில்லை. அதனால் இப்படி குறுக்கு வழியில் சம்பாதிப்பது தவறில்லை எனக் கருதுகின்றனர். இந்த விரக்தியும் குற்றம் புரியத் தூண்டுவதாகக் கருதலாம்.

குறிப்பாக அறியாமை, வறுமை, பொருளாசை, சபலம் இவைகள் மற்றும் சந்தர்ப்ப சூழ்நிலையினாலும், ஆசைகள் நிறைவேறாத போதும், சுயவிருப்பு வெறுப்புகளால் திட்டமிட்டு தவறு செய்தல், தாங்கள் அறியாமலேயே பிறரால் தவறு செய்யத் தூண்டப்படுதல் போன்ற பல காரணங்களால் குற்றம் விளைகின்றது.

சினிமா, தொலைக்காட்சி போன்றவற்றில் வருவது போன்று ஆடம்பர வாழ்க்கைக்காகவும், கொள்ளையடித்து அகப்பட்டுக் கொள்ளாமல் பணம் சேர்த்து விட்டால் கூட ஒரு மனிதனுக்கு சமூக அந்தஸ்து கிடைத்து விடுகிறது என்று இருக்கும் போது, எந்த வழியில் சென்றாவது சமூகத்தில் உயர்ந்த நிலையை அடைவது மனிதனுடைய இலட்சியமாக அமைந்து விடுவதாலும் குற்றம் விளையலாம்.

குமருப் பருவ குற்றவாளிகள் விபச்சார மற்றும் சூதாட்ட விடுதிகளில் குற்றம் புரிவது, அரசியல் குற்றவாளிகள் புரியும் அதிகாரத்துக்கு வரச்செய்யும் வேலைகள், தொழிலாளர் மற்றும் முதலாளிகளுக்கிடையே நடக்கும் போராட்டங்கள், ஜாதி வேற்றுமை, இன மத வேற்றுமை, தீண்டாமை, பயங்கரவாத மற்றும் தீவிரவாதக் கொள்கைகள் போன்றவைகள் குற்றம் புரிய காரணங்களாகவும் அமைகின்றன.

ஒருவருடைய உயிர், உடல், உடைமை, புகழ் இவைகளுக்கு ஊறு விளைவிக்கும் செயல்கள், நாடு, அரசு, நீதிமுறை, பொது அமைதி இவற்றிற்கு எதிரான செயல்கள் சமயம், குடும்ப வாழ்க்கை, இவற்றிற்கு இடையூறு விளைவிக்கும் செயல்கள் இவையெல்லாம் குற்றங்களாகின்றன.

ஒருவரை நாள்பட்ட பகை காரணமாகவோ பழிவாங்கும் நோக்கத்துடனோ, பொறாமை போன்ற காரணங்களினாலோ கொலை புரியும் நோக்கத்துடன் திட்டம் தீட்டி அவரைக் கொலை செய்தல் குற்றமாகும்.

வன்முறையில் ஈடுபடாமல், ஒருவருடைய பெயர், புகழ், குடும்பம், ஆகியவற்றிற்குக் கேடு விளைவிக்கும் பொருட்டு, அவருடைய புகழுக்குக் களங்கம் ஏற்படுத்துதல், அதாவது அவதூறாகப் பேசுதலும் எழுதுதலும் குற்றமாகும்.

அரசுக்கு எதிராகச் செயல்படும் செயல்களும் குற்றமாகும். மக்கள் நலனை கருத்தில் கொண்டு அரசு வகுத்துள்ள சட்டதிட்டங்களை மீறும் பொருட்டு அதற்கு எதிராகச் செய்யும் செயல்கள் குற்றமாகும். பொது

அமைதியினைக் குலைக்கும் வகையில் போராட்டம், ஆர்ப்பாட்டம், கலவரம் முதலிய வன்முறைச் செயல்களில் ஈடுபடுவதும் குற்றமாகக் கொள்ளப்படும். இன, மதம், மொழி போன்ற பிரிவினைகள் சமூகத்தில் ஒரு நெறிமுறையோடு வாழத்தான் வகுக்கப்பட்டிருக்கின்றன. ஆனால் அவற்றைப் புரிந்து கொள்ளாமல் மக்களிடையே இன மதக் கலவரங்களைத் தூண்டி, மக்களின் ஒற்றுமையைக் குலைப்பது குற்றமாகும். அமைதியாக இருக்கும் குடும்பத்தில் நுழைந்து அவர்களின் நிம்மதியைக் கெடுத்து பல்வேறு வழிகளில் பல காரணங்களுக்காக அவர்களைத் துன்புறுத்தல் குற்றமாகக் கொள்ளப்படும். குற்றங்களை அரசாங்கக் குற்றம், துரோகக் குற்றம், பொருட்குற்றம் என, இம்மூன்று விதக்குற்றங்களை முதல்தரக் குற்றம், இரண்டாந்தரக் குற்றம், மூன்றாந்தரக் குற்றங்கள் என வகுத்துள்ளார்கள். சட்டம் விதிக்கும் குற்றங்களும் நாட்டுக்கு நாடு, காலத்திற்கு காலம், மாறுதல் அடைகின்றன
(சண்முகசுப்பிரமணியம், 1995:ப20).

## குற்றங்களுக்கான காரணங்கள்.

**உள்ளச் சிதைவு** : காதல் தோல்வி, பண இழப்பு, வாழ்க்கையில் தோல்வி ஏற்படும் போதும், இலட்சியம் ஈடேறாத போதும், படு தோல்வி அடையும் போதும் உள்ளச்சிதைவு ஏற்படுகின்றது. இதன் பின்னர் அவர்கள் தங்கள் செயல்பாடுகள், நடத்தைகள் குற்றத்தன்மை உடையவை என்பதை உணர மறுக்கின்றனர். அதைத் தவறு என்பதைப் புரிய வைப்பதற்கும், உணர வைப்பதற்கும் மருத்துவ ஆலோசனைகள் தேவைப் படுகின்றன. குடும்பத்தினர், உறவினர்கள் மற்றும் சுற்றி உள்ளோரின் அக்கறையும் இதற்குத் தேவைப்படுகின்றது. அது இல்லாத பட்சத்தில் குற்றம் புரியும் மனநிலை அவர்களுக்கு அதிகமாகிக் கொண்டே செல்கின்றது.

பொதுவாகக் குற்றம் புரிதலுக்கு, சூழ்நிலையும், குற்றவாளியின் மன நிலையுமே காரணமாகும் என்பதை விளக்கும் வாய்ப்பாடு,

<u>Crime + tendency +situation = c=t+s</u>
Residency

(பொன்பரமகுரு, 1999,ப. 36).

**சமூக அக்கறையின்மை** : இது குற்றம் அதிகரித்தலுக்கும், விளைதலுக்கும் முக்கியக் காரணமாக அமைகின்றது. யாருக்கு எந்தப் பிரச்சினை ஏற்பட்டாலும், நம்மை அது பாதிக்காத வரையில் பிரச்சினை இல்லை என்று நினைக்கும் மனப்போக்கு பெருகி விட்டது.

பழைய காலத்தில் தங்கள் ஊருக்குள் அறிமுகம் இல்லாத புதிய நபர் யாரேனும் வந்தால் அவர் யார்? என்ன? என்றெல்லாம் விசாரிக்கும் நிலையை இன்று காண முடியவில்லை. நகரங்களில் உள்ளவர்கள் பக்கத்து வீடுகளில் உள்ள நபர்களைக் கூட அறிந்திருக்க மாட்டார்கள். எனவே பொதுமக்களுக்கும், குற்றவாளிகளுக்கும் உள்ள வித்தியாசத்தை அதிகம் கண்டுகொள்ள முடிவதில்லை.

அறிமுகம் இல்லாத அண்டை வீடுகளில் வாழ்பவர்கள் பற்றிய விபரங்கள் தெரியாத காரணத்தினால், அந்த வீட்டுக்குள் திருடனே வந்தாலும், அந்த வீட்டை சோந்தவர் என்று எண்ணி

விடுகின்றனர். இதனால் எந்த இடையூறுமின்றி நிதானமாக பலமணி நேரம் வீட்டினுள் இருந்து திருடன் திருடிவிட்டுப் போகிறான்.

தற்போது குற்றவாளி குற்றத்தின் அளவு அதற்குரிய தண்டனை, அனைத்தையும் தெளிவாக அறிந்து இருக்கிறான். என்னென்ன வகையில் செய்தால் சட்டங்களை அடிப்படையாகக் கொண்டு தப்பிக்கலாம் எனபதை அறிந்து வைத்திருக்கிறான் என்பதனை, சமூகக் குற்றங்களைப் புரிவோர் நல்ல அறிவாற்றல் உடையவராகவும், குற்றங்களைப் பற்றியும் அவற்றின் தண்டனைகளைப் பற்றியும், போதிய அறிவு பெற்றவர்களாகவும் அவ்வறிவினை தனக்குச் சாதகம் ஆக்கிக் கொண்டு ஒரு சில நுணுக்கமான இடங்களில் தன்னுடைய திறமையால் குற்றத்தை இழைத்து விட்டு தப்பித்துக் கொள்பவர்களாகவும் காணப்படுகின்றனர் என்பதன் மூலம் அறியலாம். (நியூ ஜெர்சி தமிழ்ச் சங்கம், 1997 ப. 131)

**மக்கள் தொகைப் பெருக்கம்** : மக்கள் தொகைப் பெருக்கம் குற்றங்கள் அதிகரிக்க ஒரு காரணமாக அமைகிறது என்று கூறலாம். பெருகி வரும் மக்கள் தொகையின் காரணமாகச் சமூகத்தில் பல வகையான குற்றங்கள் நிகழ்கின்றன. பெரும்பாலும் பஞ்சம், பசி, பட்டினி போன்ற வறுமையின் கொடுமையைப் போக்கத் திருட்டுத் தொழிலில் ஈடுபடுகின்றனர். படிப்புக்கு ஏற்ற வேலை கிடைக்கவில்லை என்றாலும், அதற்கேற்ற ஊதியம் வழங்கப்படாமையினாலும் குறுக்கு வழியில் பணம் தேட முயல்பவர்கள் குற்றச் செயல்களில் ஈடுபடுகின்றனர்.

சாட்சி சொல்ல முன் வராமை : சமுதாயத்தில் நடக்கின்ற தவறுகளை யார் செய்தார்கள் என்று தெரிந்திருந்தும் கூட பலர் சாட்சியாக வந்து உண்மைகளை வெளியில் சொல்வதில்லை. அவ்வாறு தாங்கள் நேரில் பார்த்தவைகளை நீதிமன்றத்தில் கூறினால் தங்களைச் சமுதாயத்தில் நிம்மதியாக வாழ விடமாட்டர்கள் என்று பயந்து உண்மையைச் சொல்லக் கூடத்தயங்குகின்றனர். எனவே நீதியை நிலைநாட்ட விரும்பும் நல்லவர்கள் கூட அநீதிக்குத் துணை போகின்றனர் எனக் கூறலாம்.

நேர்மை, நீதி, நியாயம் என்ற நிலையில் இயங்குபவர்கள் சாட்சி சொல்ல முன்வருகின்றனர். அந்த நிலையில் அவர்களுக்கு வரும் கொலை மிரட்டல்கள், அச்சுறுத்தல்கள் போன்றவை உண்மையை வெளிக்கொணர முடியாதபடி செய்து விடுகின்றன.

இதனை, பாதிக்கப்பட்டவர்கள் நீதிமன்றத்துக்கு வந்து நீதியை எதிர்பார்க்கும் நிலையில் சாட்சியம் கூறி நீதியை நிலை நாட்ட வேண்டிய உயர் அதிகாரிகளே சாட்சியம் கூற மறுப்பதும் அவர்களுக்கு நீதிமன்றங்கள் பிடிகளைப் பிறப்பிப்பதும் காலம்தோறும் காணும் நிகழ்ச்சிகளாக உள்ளன. எப்படிப்பட்ட உயர் பதவியில் இருந்தாலும் எல்லோருக்கும் இருப்பது போல உயிர் பயம் ஒன்று தான். உயிருக்கு பயந்தும், சில வேளைகளில் பணத்தாசை

காரணமாகவும் சாட்சி சொல்ல மறுப்பதும் உண்டு.

**சமூக அக்கறையின்மை** : குற்றம் நாளுக்கு நாள் அதிகரித்த வண்ணமே உள்ளது. இதன் முக்கிய காரணம் சமூக அக்கறையின்மை எனலாம். சமூகத்தின் மீதான அக்கறை என்பது இன்றைய இயந்திர உலகில் வெகுவாகக் குறைந்து வருகின்றது. கண்ணெதிரே கொலை நடந்தாலும், சமூகத்தைச் சீரழிக்கும் குற்றங்கள் நடந்தாலும் அவற்றைக் கண்டுகொள்ளப் பலருக்கு நேரம் இருப்பதில்லை. அப்படியே அதனைக் கண்டு கொண்டாலும், அதனால் தங்களுக்கு வீண் அலைச்சல், தேவையில்லாத தொந்தரவு என நினைத்து சமூகத்தைக் காப்பாற்ற வேண்டிய கடமையை மறந்து விடுகின்றனர்.

ஒருவருக்கொருவர் வேலைகளைப் பகிர்ந்து கொண்டு, விட்டுக்கொடுக்கும் மனப்பான்மையுடன் பெரியோர் அறிவுரைகேட்டு அவர்களின் ஆலோசனைகளுக்கு இணங்கி வாழ்ந்த காலம் இன்று அறவே மாறிவிட்டது. கூட்டுக் குடும்பத்தின் வாயிலாகக் கிடைத்த பாசம், சிறு சிறு உதவிகள், வாழ்க்கைக்குத் தேவையான ஆலோசனைகள், ஒருவர் நலனில் மற்றவர் காட்டும் அக்கறை ஆகியன தனிக்குடும்பத்தில் கிடைக்காமல் போய்விட்ட நிலையில் பலவித குழப்பங்கள் உருவாகி அவற்றைத் தீர்க்க மனநல மருத்துவர்களையும், நீதிமன்ற வாயில்களையும் நாடவேண்டிய நிலை ஏற்பட்டு விட்டது.

சில நேரங்களில் கூட்டுக் குடும்பத்தின் தொந்தரவுகளால் சண்டை, சச்சரவுகள் ஏற்பட்டு விவாகரத்து வரையிலும் சென்று விடுகின்றனர். எனவே கூட்டுக் குடும்பத்திலும் பிரச்சினைகள், தனிக் குடும்பத்திலும் குழப்பங்கள் ஆகியவை பலவித சமூகச் சீர்கேடுகளுக்குக் காரணமாகின்றன. வீட்டில் பெற்றோர்களின் அன்பும், பாசமும் சரியான அரவணைப்பும் இல்லாத காரணத்தால் அதனை வெளியில் தேடுகின்றனர். அவ்வாறு கிடைக்கும் அன்பு போலியானதாக இருந்தால் அதனால் ஏற்படும் துன்பம் பலவகைக் குற்றங்களுக்குக் காரணமாக அமைகின்றது.

சிறுவயதில் சின்னச் சின்னத் திருட்டுக்களை மேற்கொண்டு அதன் மூலம் கச்சிதமாகக் கொள்ளை போன்ற குற்றங்களைக் கற்றுக் கொள்கின்றனர். நாளடைவில் இது தவறில்லை என்ற மனநிலை உருவாகி பெரிய குற்றங்களில் ஈடுபடுகின்றனர். இவ்வாறு சிறிய குற்றங்களில் ஈடுபடும் பொழுது அதற்குச் சரியான தண்டனை கிடைக்காமை மற்றும் தண்டைன மூலம் திருந்தாமை போன்றவை பெரிய குற்றங்களுக்கு வழிவகுத்து விடுகிறது. இதனையும் குற்றம் அதிகரித்தலுக்கு ஒரு காரணமாகக் கூறலாம்.

## குற்றமாகாச் சூழ்நிலைகள்

எதிர்பாராமல் விளைகின்றவை, அதாவது விபத்து போன்றவை குற்றமாகாது. சட்டத்திற்கு இசைவான செயலை, சட்ட இசைவான முறையில் போதிய கவனத்துடனும், விழிப்புடனும் எவ்விதக் குற்றக்கருத்தும்,

எண்ணமும் இன்றி செய்யும்போது, தற்செயலாகவோ, துரதிருஷ்டவசமாகவோ விளையும் செயலே எதிர்பாரா விளைவாகும். அது குற்றமாவதில்லை என்று கூறப்படுகிறது. அதே போன்று சட்டப்படியான கடமைகளைச் செய்வது குற்றமாகாது. பொலிசார் குற்றவாளிகளைக் கைது செய்வது குற்றமாவதில்லை. வேகமாக எதிரெதிர் திசைகளில் வருகின்ற வாகனங்கள் இரண்டும் மோதிக் கொள்கின்றன. ஓட்டுனர் வாகனத்தை நிறுத்த முயற்சிக்கிறார். வேகத்தடை வேலை செய்யவில்லை. கட்டுப்பாடு இன்றி மற்றொரு வாகனத்தின் மீது மோதி விடுகின்றது. இது குற்றமாகாது. ஏனெனில் இது தற்செயலாக நடைபெறுகிற ஒன்றாகும். மின்சாரம் பாய்ந்து ஒருவர் பலியாகின்றார். மற்றும் மின் கசிவினால் வீடுகள் பல தீப்பற்றி எரிந்து விடுகின்றன. எவ்வளவோ போராடித் தீயை அணைக்க முயன்றும் பல உயிர்களும், உடமைகளும், பொருட்கள் பலவும் சேதமாகி விடுகின்றன. இது தானாக நிகழ்ந்தது. துரதிருஷ்டவசமாக நடைபெற்ற செயலாகையால் குற்றமாகாது. அது போன்று இயற்கைச் சீற்றத்தால் நடைபெறும் நிகழ்வுகள், அதாவது பூகம்பம், பெருமழையால் ஏற்படும் வெள்ளபெருக்கு, புயல் காற்றால் ஏற்படும் சேதம் போன்றவை குற்றமாகாது.

## குற்ற ஈடுபாடு

குற்ற ஈடுபாடு என்பது ஒருவர் ஒருமுறை குற்றம் செய்து அதற்காகத் தண்டிக்கப்பட்ட பின்பும் மீண்டும் குற்றம் புரிந்து தண்டனைக்கு ஆளாகும் போக்காகும். குற்றம் செய்த ஒருவன், தொடர்ந்து குற்ற ஈடுபாடு உடையவனாகவே காணப்படுகிறான், குற்றம் செய்வதற்கு முன்பு இருக்கும் பய உணர்வு, குற்றம் செய்து விட்டு சிறைத் தண்டனை பெற்ற ஒரு குற்றவாளிக்கு அதிக அளவில் இருப்பதில்லை. சமுதாயத்திற்குப் பயந்து கொண்டு நன்னெறிகளில் ஒழுக வேண்டும் என்ற மனப்பாங்கை அவன் இழந்து விடுகிறான். குற்ற ஈடுபாட்டிற்கு இது காரணமாக இருக்க முடியும் என ஊகிக்கலாம். தொடர்ந்து குற்றம் புரிய குடும்பப் பின்னணியும் ஒரு முக்கிய காரணம். தவறு செய்யும் குழந்தைக்கு அதைத் தவறு எனச் சுட்டிக்காட்டும் பெற்றோர்கள் மத்தியில் குற்றத்தை ஊக்குவித்துத் தாங்களும் அதில் சேர்ந்து கொண்டு குற்றம் புரிவது வியப்பிற்குரியது. குற்ற அதிகரிப்பு சமூகத்தில் நீதி நெறியின் மதிப்புடன் ஆழமாக சம்பந்தப்பட்டது. எடுத்துக்காட்டாக இலஞ்சம் மற்றும் திட்டமிட்ட குற்றங்கள், நேர்மை மற்றும் பொதுவாழ்க்கை நேர்மையின் பற்றாக்குறையால் வெற்றி பெறுகிறது. தொடர் குற்றங்களில் ஈடுபடுபவர்கள் குற்றவாளிகள் என்று தெரியாதவாறு சாதாரணமாக நடந்து கொள்வர். இப்படி சமூகத்தில் மக்களோடு மக்களாக நடமாடும் இவர்களை மக்கள் எளிதில் நம்பி ஏமாந்து விடுகின்றனர். சுகமான வாழ்க்கை வாழ்கின்ற இவர்களைச் சமுதாயத்திற்கு இனங்காட்ட, தேடப்படும் குற்றவாளிகளைப் பிடித்துத் தண்டனை கொடுத்து நியாயமான நல்ல வழியில் தொழில் செய்து திருந்தி வாழ

வழி வகுத்துக் கொடுக்க வேண்டும்.

நீதி

நீதி ஒரு செயல் அல்லது செயல் தவிர்ப்பால் பாதிப்புற்றவர் மேல் வினைபுரிவதாகும். சட்டம் அச்செயல் அல்லது செயல்தவிர்ப்பைப் புரிந்தவரின் மீது வினைபுரிவதாகும். சட்டத்தின் வரம்பு நீதியின் வரம்போடு ஒப்பிடுகையில் குறுகியது. நீதியின் நோக்கத்தோடு ஒப்பிடுகையில் சட்டத்தின் நோக்கம் எளிமையானது.

நீதிக்கு எதிராகச் செய்யப்படுபவை எல்லாம் குற்றங்களாகின்றன. அவற்றைப் பின்வருமாறு கூறலாம்.

1. குற்றம் இழைத்தவரைக் காட்டும் சான்றுகளை அழித்தல் மற்றும் மறைத்தல்.
2. குற்றவாளி தண்டனையிலிருந்து தப்பிக்க வேண்டும் என்ற கருத்தோடு, அந்தக் குற்றம் பற்றி பொய்த் தகவல் அளித்தல்.
3. குற்றங்களைக் குறித்து பொலிஸ் நிலையத்திற்கு அறிவிக்க வேண்டிய சட்டபூர்வமான கடமை இருந்தும் அவ்வாறு அறிவிக்காமல் இருத்தல்.
4. ஆள் மாறாட்டம் செய்து ஒருவராக மற்றொருவர் நடித்து வழக்கை நடத்துதல்.
5. பொய்யாகக் குற்ற வழக்குப் போடுதல் மற்றும் பொய்யாகக் குற்றம் சாட்டுதல்.
6- குற்றம் புரிந்தவர்களுக்குத் தஞ்சம் அளித்துத் தண்டனையிலிருந்து அவர்களை மறைக்க முயலுதல் குற்றமாகும். ஆனால், கணவன், மனைவி, இவர்கள் ஒருவருக்கொருவர் புகலளித்தலைக் குற்றமெனச் சட்டம் கொள்ளுவதில்லை (சண்முகசுப்பிரமணியம், 1995, ப.417).
7. சட்டப்படியான காவலில் இருந்து தப்புவதும், தப்பிச் செல்ல முயலுவதும் குற்றம்.
8. நீதிமன்றத்தை அவமதித்தல் மற்றும் நீதிமன்ற அலுவல்களில் குறுக்கிட்டுத் தடை விதிப்பது குற்றமாகும்.
9. குற்றங்களைச் செய்யத் தூண்டுதலும் குற்றமாகும். இவற்றை எல்லாம் நீதிமுறைக்கு எதிரான குற்றங்களாகக் கொள்ளலாம்.

சட்டம்

சட்டம் என்பது ஒரு நிறுவன அமைப்பு முறையால் அந்நிறுவன ஆளுகை எல்லைக்குள் வாழும் அனைவரையும் ஒழுங்குபடுத்தும் விதிகள், நெறிமுறைகள் போன்றவற்றைக் குறிக்கும். ஒரு குறிப்பிட்ட செயல் அல்லது செயல்தவிர்ப்பு குறித்த தண்டனை வழங்குகின்ற அதிகாரத்தை தன்னகத்தே கொண்டிருப்பதே சட்டத்தின் தனித்தன்மையாகும். சட்டத்தின் தோற்றம் மனிதகுலத்தின் தொன்மைச் சமூக வாழ்க்கைக்காலத்தின் தோற்றத்தோடு தொடர்புடையதாகும். சமூகமாகத் திரண்ட மனிதர்களிடம் ஏற்பட்ட வகுப்பு வேறுபாட்டால் தோன்றிய அரசு எனும் நிறுவனத்தின் தோற்றத்தோடு சட்டத்தின் வரலாறு தொடங்குகிறது.

இன்னதைச் செய் மற்றும் இன்னதைச் செய்யாதே என்று உரைக்கும் அதிகாரமும் அதனை ஒப்பாத அல்லது மீறுகிற எவரையும் தண்டிக்கிற அதிகாரமும் சட்டத்தின் இரு முதன்மைக் கூறுகளாகும். ஒழுங்கு, நெறிமுறை கட்டுப்பாடு இல்லாத சமுதாயத்திற்குச் சட்டத்தின் மூலம்

தான் இவைகளைக் கொணர முடியும். சட்டம் மக்களுக்கு இடைஞ்சல் விளைவிப்பதற்கு அல்ல, மாறாக உறுதுணையாக இருப்பதற்காகவே ஏற்படுத்தப்பட்டது. பாராளுமன்றத்தினால் இயற்றுவது மட்டுமல்ல சட்டம். பழக்கவழக்கங்களில் உருவான நல்ல கருத்துக்களும் சட்டத்தின் அடித்தளமாக அமைகின்றன. சட்ட ஒழுங்கை திறம்பட நிர்வகிப்பதற்காகப் பொலிஸ் துறையானது அதிகாரத்தைப் பயன்படுத்தி கைது செய்யலாம். எனினும் எல்லா நடவடிக்கைகளுக்கும் சட்டம் இன்றியமையாததாகிறது. அனைவரும் சட்டத்திற்கு முன் சமம். மற்றும் அனைவருக்கும் எந்த வேறுபாடும் இல்லாமல் சட்டத்தால் சம பாதுகாப்பு அளிக்கப்பட வேண்டும் (Narashmen, 1999, P.3).

ஒரு செயலைக் குற்றமெனத் தீர்மானிப்பதற்கு அச்செயல் தீய எண்ணத்தோடு செய்யப்பட்டதா என்பதைச் சட்டம் ஆராய்கின்றது. தீய எண்ணத்தால் செய்த செயலையே குற்றமெனச் சட்டம் கொள்ளுகின்றது. அத்தீய எண்ணத்தைச் சட்ட நூல் 'குற்றமனம்' என்று குறிக்கின்றது. "குற்றமனம்" என்பதை ஆங்கிலத்தில் 'Guilty mind' என்று கூறுவார்கள். பொதுவாக, "குற்றமனம்" இன்றி ஒருவர் செய்த செயலைக் 'குற்றம்' எனச் சட்டம் கொள்ளுவதில்லை. புறச் செயலை மட்டும் வைத்து ஒன்றைக் "குற்றம்" எனக் கூறுவதில்லை, அது குற்றமனதோடு செய்யப்பட்டிருத்தல் வேண்டும்" (Markus,2002:p44). பொதுவாக ஒருவரைக் குற்றவாளியென்று தீர்மானிப்பதற்கு முன், அவர் குற்ற மனத்துடன் தீங்கான செயலைச் செய்தாரா என்பதை ஆராய்தல் வேண்டும். குற்றமனம் இல்லாதவரைக் குற்றவாளியெனக் கொண்டு தண்டித்தல் கூடாது.

ஒரு குற்றத்திற்கு இரு கூறுகள் உண்டு ஒன்று அகநிகழ்வான குற்ற எண்ணம் (Mens rea) மற்றொன்று புற நிகழ்வான விலக்கப்பட்ட தீய செயல் (Actus reus) இவ்விரண்டும் ஒன்றுபடும் போதுதான் ஒருவரைக் குற்றவாளியெனச் சட்டம் தண்டிக்கிறது. இவ்வாறு "கென்னி" என்ற குற்ற இயல் சட்ட அறிஞர் விளக்குகிறார். பலதிறப்பட்ட குற்றங்களையும் விபரித்து அவற்றின் முறைகளைக் கூறுவது குற்றத் தொகுப்புச் சட்டமாகும். அச்சட்டத்தில், ஒவ்வொரு குற்றத்தின் முறைகளைக் கூறும் பிரிவிலும் அக்குற்றத்திற்கான குற்ற மனநிலையையும் கூறப்பட்டிருக்கிறது.

'கருதி' (Intentionally) 'தெரிந்து' (Knowingly) 'மனம் இசைந்து' (voluntarily) 'வஞ்ச மனத்துடன்' (Fraudulently) 'நேர்மையின்றி' (Dishonestly) என்ற சொற்கள் அந்தந்தக் குற்றத்திற்கு வேண்டிய 'குற்ற மனதினைக்' காட்டி நிற்கின்றன. நேர்மையில்லாத எண்ணத்துடன் பிறர் பொருளை எடுப்பது தான் திருட்டுக் (Theft) குற்றமாகிறது. வஞ்சமனத்துடன் பிறர் பொருளை அபகரித்தலே 'ஏமாற்றுதல்' (Cheating) என்ற குற்றமாகும். பிறர் உடலுக்கு

ஊறுவிளைவிக்க வேண்டுமென்ற கருத்தோடு பிறருக்குக் காயம் விளைக்கும் செயலே 'காயம் விளைத்தல்' (Causing thurt). அந்தக் குற்ற மனதோடு குற்றச் செயலைச் செய்தனரா என்பதை நீதிமன்றம் ஆராய்கின்றது (சண்முக சுப்பிரமணியம், 1995:ப.36).

குற்ற மனம் இன்றிச் செயல் புரிந்தவர்களைக் குற்றவாளிகள் எனத் தீர்மானித்து தண்டிப்பது இல்லை. "குற்ற மனதுடன் செய்யப்படாத செயல் குற்றம் ஆவதில்லை" என்ற கொள்கையை இலத்தீன் மொழியில் "Actus non facit reum, nisi mens sit rea" என்று கூறுவார்கள். "குற்றமனம் இன்றிக் குற்றம் இல்லை" என்ற இந்த விதி மொழி (maxim) குற்றவியல் சட்டத்தின் அடிப்படை நெறியாகும் (Elizabeth & Martin, ed.2003).

சிந்தனை இன்றிச் செயல் இல்லை. செயல்களுக்கு மூலமாகச் சிந்தனை அமைவதால் புறச் செயல்களைவிட அச் செயல்களுக்குக் காரணமான மனநிலையையே முக்கியமாகச் சட்டம் கொள்ளுகின்றது. இவ்வாறு, ஒருவரைக் குற்றவாளியென்று தீர்மானிப்பதற்கு முன் அவர் அக்குற்றமான செயலைச் செய்தபொழுது அவருடைய மனநிலை என்ன என்பதைச் சட்டம் ஆராய்கிறது.

## தண்டனை

குற்றம் ஒரு சமூக நிகழ்வு, சமூகத்தின் கையில் தனிநபர் ஒரு கருவி அவர் புரியும் குற்றங்களில் சமூகத்தின் பொறுப்பேற்பை உறுதி செய்யும் நடவடிக்கைகள் தண்டனை முறைகளில் வெளித் தோன்றுகின்றன. உலகில் உள்ள எல்லா உயிர்களும் தண்டனைக்கு அஞ்சியே ஒழுகுகின்றன. தண்டனை அளிப்பதன் நோக்கங்கள் பலவாகும். தண்டனை யளிப்பதன் ஒரே நோக்கம் இந்த சமுதாயம் தொடர்ந்து வாழ்வதற்கான உறுதியினை உருவாக்கவும், மக்கள் குற்றங்கள் புரிய அஞ்சுதல் வேண்டும் என்ற நோக்கத்திற்காக ஆகும். எனவே குற்றச் சட்டங்கள் குற்றவாளியைப் பழிவாங்க பயன்படுத்தப்படாமல் குற்றங்கள் நடைபெறுவதைத் தடுப்பதற்காகப் பயன்படுத்தப்பட வேண்டும். தண்டனை அளிப்பதன் நோக்கங்களைப் பின்வருமாறு காணலாம்.

தண்டனையால் எந்த விதமான தடையோ, அச்சமோ இல்லை எனில் குற்றங்கள் பெருகிவிடும். எனவே தண்டனை நடத்தையைக் கட்டுப்படுத்தும் விதத்திலும், அச்சமூட்டும் விதத்திலும் அமைய வேண்டும். தண்டனையின் குறிக்கோள் குற்றவாளியைச் சீர்திருத்துவதாகவும், தண்டனையை உரியவாறு செயல்படுத்தி சமுதாயத்தைப் பாதுகாப்பதாகவும் குற்றத்தைக் கட்டுப்படுத்தும் விதத்திலும் அமைதல் வேண்டும்.

## பண்டைக் காலத்தில் நீதி வழங்கும் முறைகள்

நீதி வழங்குதல் என்பது அரசனின் முக்கியமான பொறுப்புகளில் ஒன்று ஆகும். விசாரணை நடத்தி குற்றவாளி எனக் கண்டால் தண்டனை வழங்குவது, இல்லை என்றால் விடுவிப்பது நீதி முறைமையாகும். பண்டைய

காலத்தில் கிராமங்களில் சிறு நீதிமன்றங்கள் இருந்தன. கிராமத்தலைவரும், பெரியார்களும் அந்தச் சிறு நீதிமன்றங்களில் அங்கம் வகித்தனர். சிறு களவுகளையும், சிறு குற்றங்களையும் அந்நீதிமன்றம் விசாரணை செய்தது. உதாரணமாக, கிராமத்தில் உள்ள எல்லைத்தகராறுகள் போன்றவற்றைக் குறிப்பிடலாம். அந்நீதிமன்றத்தில் பெரும்பாலான நீதிபதிகளின் கருத்திற்கேற்ப நீதி வழங்கப்பட்டது.

பண்டைய கால சட்ட திட்டங்களுக்கும் இன்றைய சட்ட திட்டங்களுக்கும் நிறைய வேறுபாடுகள் இருக்கின்றன. எடுத்துக்காட்டாக, பிராமணர்களுக்குத் தூக்குத் தண்டனை எக்காரணத்தைக் கொண்டும் வழங்கப்படக் கூடாது எனச் சட்டம் இருந்தது. அவர்கள் விரும்பினால் பிராயச்சித்தமாக உண்ணா நோன்பு நோற்று இறுதி முடிவைத் தேடிக் கொள்ளலாம் (சண்முகசுந்தரம்,1988:ப.27). நீதி வழங்குவதில் குற்றவாளியைத் தண்டிப்பது என்ற நியதியே கடைபிடிக்கப்பட்டது. குற்றவாளிகளைச் சீர்திருத்தி நல்வழிக்குக் கொண்டு வருதல் அக்காலத்தில் நடை முறையில் இல்லை. அயல்நாட்டு ஒற்றர்கள் வேவு பார்க்க வந்தால் அவர்களுக்கு மரண தண்டனையளிக்கப்பட்டு அரச துரோகத்திற்கும் மரண தண்டனையே வழங்கப்பட்டது. யானையின் காலால் மிதிபட்டு சாகடிக்கப்படும் தண்டனையும் வழங்கப்பட்டது என்பதன் மூலம் அறியலாம். பழங்காலத்தில் குற்றங்களுக்குக் கடும் தண்டனை விதிக்கப்பட்டது. கடன் பெற்றவன் அதைத் திரும்பக் கொடுக்க மறுத்தால், கடன் வாங்கவில்லை என்று கூறி மறுத்தால், அவனை நல்ல பாம்பு வைத்த குடத்திலே கைவிடச் சொல்வது வழக்கம். கடன் வாங்கியிருப்பின் கடிக்கும். அன்றெனின் கடிக்காது என்று நம்பினர். (கிருட்டிணன்,1992,ப.65).

## தண்டனைக் கோட்பாடுகள்

நாகரீகம் வளர்ந்த நாடுகளில் குற்றம் புரிந்தவனுக்குத் தண்டனை வழங்குவது தலையாய கடமை ஆகும். குற்றம், குற்றவாளிகள், தண்டனை எல்லாம் சரிவர கவனிக்கக் குற்ற கோட்பாடுகளைக் ஆராய்ந்தாக வேண்டும். எவன் ஒருவன் குற்றம் செய்கிறானோ அவன் அந்த குற்றத்திற்கான பதிலைத் தரவேண்டும். அப்போதுதான் குற்ற நடவடிக்கைகளுக்கு சரியான பரிகாரம் கிடைக்கும் இப்படி கொடுப்பதை தான் தண்டனை என்கிறோம். இந்த தண்டனை முறையை பின்வரும் பிரிவுகளுக்குள் அடக்கலாம் அவைகளாவன.

1. அச்சுறுத்தல் தண்டனைக் கொள்கை (Deterrent Theory of Punishment)
2. பழிக்குப்பழி வாங்கும் தண்டனைக் கொள்கை (Retributive Theory of Punishment)
3. குற்றங்களைத் தடுத்தல் தண்டனைக் கொள்கை (Preventive Theory of Punishment)

4. சீர்திருத்தல் தண்டனைக் கொள்கை (Reformation Theory of Punishment)

## அச்சுறுத்தல் தண்டனைக் கொள்கை (Deterrent Theory of Punishment)

இன்ன குற்றம் செய்தால் இன்ன விதமான தண்டனை கிடைக்கும் என்று சட்டம் கூறுகிறது. இவ்வாறு தண்டனையைக் கூறி சட்டம் மக்களைக் குற்றங்கள் புரியாமல் செய்வதற்கு முயலுகிறது. எனினும், பேராசையாலோ, கோபத்தாலோ உந்தப்பட்டவர்கள் தமக்கு வரவிருக்கும் தண்டனையையும் பொருட்படுத்தாது குற்றச் செயல்களில் இறங்குகின்றனர். இந்த நிலையில் சட்டம் தண்டனையை நிறைவேற்ற வேண்டியிருக்கிறது. அந்தத் தண்டனையால் இரண்டுவிதப் பயன்கள் எழுகின்றன. அளிக்கப்படும் தண்டனை குற்றவாளியின் உடலுக்கு வேதனையையும், உள்ளத்திற்கு அச்சத்தையும் அளிக்கிறது. எனவே, தண்டனையை அனுபவித்தவன் இனி எதிர்காலத்தில் குற்றங்கள் செய்வதற்கு அஞ்சுகிறான். குற்றவாளி தண்டனையில் உழல்வதைச் சமூகத்தில் உள்ள பிறரும் பார்க்கின்றனர். குற்றமிழைத்தால் இதுபோன்ற தண்டனை தமக்கும் கிடைக்கும் என்ற அச்சம் அவர்கள் மனத்திலும் எழுகிறது.

குற்றம் செய்வதில் ஓரளவு நாட்டமுள்ளவர்களும், குற்றவாளிக்கு வழங்கும் தண்டனையைக் கண்டு மனம் திருந்தலாம். இவ்வாறு அளிக்கப்படும் தண்டனை, அதைப் பெற்ற குற்றவாளியையும் அச்சுறுத்துகிறது. பிறரையும் அச்சுறுத்தி நல்வழியில் நிற்கச் செய்கிறது. இந்த வகையில், தண்டனை அச்சுறுத்தி நல்வழிப்படுத்துகிறது.

அச்சுறுத்தல் தண்டனைக் கொள்கையில் குற்றவாளி ஒரு கருவியாகப் பயன்படுத்தப்படுகின்றார். இக் கொள்கையானது சில விமர்சனங்களையும் கொண்டுள்ளது மற்றவர்களின் நலனுக்காக தனிமனிதன் தண்டிக்கப்படுவது விமர்சிக்கப் படுகின்றது. இக்கொள்கையினர் மரண தண்டனையை ஏற்றுக் கொள்வதில்லை. ஏனெனில் மற்றயவர்களே இதன் மூலம் திருந்த இடமுண்டு. ஆனால் குற்றவாளி திருந்த இடமில்லை என்கின்றார்கள். இருந்த போதிலும் கொடூர செயல்களில் ஈடுபடுவர்களுக்கு மரணதண்டனை விதித்து, அவர்களுடைய கதையை முடித்தால்தான் அதைப்பார்த்து மற்றவர்கள் அப்படிப்பட்ட கொடூர குற்றங்களை செய்ய மாட்டார்கள் என்பதும் மரணதண்டனைக்கு அடிப்படையான கருத்தாக இருந்து வருகின்றது. ஒரு சில வழக்குகளில் மரணதண்டனை வழங்குவது சமூக நலத்திற்கும் பாதுகாப்பிற்கும் தேவையாக உள்ளது (அனஸ்,2003.ப.121-135).

18ம் நூற்றாண்டின் இடைப் பகுதியில் இத்தாலிய வழக்கறிஞர் சிகாரே பெக்காரியா, பிரெஞ்சு மெய்யியலாளர் வால்டேர், ஆங்கிலேய சீர்திருத்தவாதி ஜெரமி பென்தாம் போன்றவர்கள் மரண தண்டனை என்பது மனித சமுதாயத்துக்கும், மனிதாபிமானத்துக்கும் களங்கம் ஏற்படுத்தும் சட்டப் பிரிவு என்று கூறி இதற்கு எதிராகக் குரலெழுப்பினர்.

இவர்கள் குரலெழுப்பி ஒரு நூற்றாண்டு காலம் கடந்த பிறகு 1853-ல் வெனிசுலாவும், 1867-ல் போர்ச்சுக்கலும் மரண தண்டனையைத் தங்களது நாட்டுச் சட்டத்திலிருந்தே அகற்றுவதாக அறிவித்தன. இப்போது அநேகமாக மேற்கு ஐரோப்பா மற்றும் லத்தீன் அமெரிக்க நாடுகளில் மரண தண்டனை முற்றிலுமாக ஒழிக்கப்பட்டு விட்டது. 1965ல் இங்கிலாந்தும் மரண தண்டனையை இரத்துச் செய்து தீர்மானம் நிறைவேற்றியபோது, உலகம் முழுவதும் மரண தண்டனைக்கு எதிரான குரல்கள் ஓங்கி ஒலிக்கத் தொடங்கின. இத்தண்டனைக் கொள்கையின் இன்னொரு விமர்சனம் ஏனையவர்களுக்கு முன்மாதிரியாக ஒருவனைத் தண்டிப்பதாகும். இங்கு ஒருவன் குற்றவாளியாக இருந்தால் என்ன? குற்றமற்றவனாக இருந்தால் என்ன என்ற நிலை தோன்றலாம். ஒழுக்க நிலையில் குற்றம் செய்தவன் அச்செயலுக்கு பொறுப்பானவனாக இருக்க வேண்டும். செய்யப்படாத செயலுக்காக ஒருவர் எந்த வகையிலும் கருவியாக்கப்படக்கூடாது. வில்லியம் லில்லி இதற்கு கூறும் விளக்கம் மிகப் பொருத்தமானது. நாட்டை ஆள்வோர் நிரபராதிகளைத் துன்புறுத்துவதையும் திறமை குறைந்த ஆசிரியர்கள் அப்பாவி மாணவர்களுக்குத் தண்டனை வழங்குவதையும் இந்தத் தண்டனைக் கொள்கையின் விளைவாக காண்கின்றோம் என்கிறார். இருந்த போதிலும் இக் கொள்கையில் ஓரளவு நன்மை உண்டு. மற்றவர்களை குற்றம் செய்யாமல் தடுப்பதற்காக குற்றவாளிக்கு அதிக தண்டனை வழங்கும் நிலையும் இக்கொள்கை மூலமாக ஏற்படலாம்.

## பழிக்குப்பழி வாங்கும் தண்டனைக் கொள்கை (Retributive Theory of Punishment)

குற்றம் செய்தவன் தண்டனை பெறாமல் தப்பிவிடக்கூடாது என்று இயற்கையாகவே நம் மனம் ஏங்குகிறது. குற்றத்திற்குத் தக்க தண்டனை அளிக்கப்பட்டவுடன் நம் மனதில் ஒரு நிம்மதி பிறக்கிறது. இவ்வாறு, அநீதிக்கு எதிராக ஆத்திரங்கொள்ளுதல் மனிதனின் பண்பாகும்.

இத்தண்டனைக் கொள்கை பழிவாங்கும் நோக்கை பிரதிபலிக்கின்றது. குற்றம் செய்தவனை பழிவாங்கும் தன்மையுடையதாக இருக்கும்.

குற்றம் செய்தவனை தடுப்பதற்காக அல்லது திருத்துவதற்காக அல்லாமல் பழி வாங்குவதற்காக வழங்கப்படும் தண்டனை முறையாகும். இங்கு ஒருவன் அனுபவித்த அதே துயரத்தினை குற்றவாளியும் அனுபவிக்க வேண்டும் என்பதே இக்கொள்கையின் சாராம்சம். இக்கொள்கையின் படி கொலைக்கு கொலை, பல்லுக்கு பல், கண்ணுக்கு கண் என்ற அடிப்படையில் தண்டனை வழங்கப்படும். இதைச் சில சமயங்களும் ஆதரித்து இருக்கின்றது. இக்கொள்கையில் குற்றத்திற்குத் தண்டனை வழங்குவதன் மூலம் நீதியை நிலைநிறுத்தும் போக்கைக் காணலாம். இதன் விளைவாக சமூக அமைதியை ஒழுக்கத்தைப் பேணலாம் என்ற கருத்தும் கூறப்படுகின்றது.

முன்னேற்றமடைந்த சமுதாயத்தில் இத்தகைய உணர்ச்சி மக்களிடையே நிலவுவது சமூக நல்வாழ்விற்கு உகந்ததாகும். குற்றம் இழைத்தவன் தண்டனை அனுபவிப்பது அவனுடைய கடன். தண்டனையை அனுபவித்து அந்தக் கடனைத் தீர்த்தவனை, குற்றத்தால் விளைந்த பழியைத் தீர்த்துக்கொண்டவன் என்று கருதுகின்றோம். செய்த தீங்கிற்குப் பிராயச்சித்தமாகத் தண்டனை விதிக்கப்படுகிறது.

ஒரு சிறுவன் மற்றொரு சிறுவனை அடிக்கிறான். உடனே அடிபட்ட சிறுவன் தன்னை அடித்தவனைத் திருப்பி அடிக்கிறான். ஒருவன் தன்மீது கல்லெறிந்தவன்மீது திருப்பிக் கல்லை எறிகிறான். இவ்வாறு, தனக்குப் பிறர் தீங்கு இழைத்தால் அதே தீங்கைப் பிறருக்குச் செய்ய வேண்டும் என்ற எண்ணம் எழுவது இயல்பேயாகும். இந்த இயல்பை ஒட்டித்தான் அந்த நாட்களில் ஒருவன் மற்றொருவன் கையை வெட்டினால் அதற்குரிய தண்டனை அக்குற்றம் செய்தவனின் கையை வெட்டுவது என்ற முறை சில நாடுகளில் இருந்து வந்தது. இவ்வாறு, குற்றவாளிமீது பழிவாங்கும் முறையில் தண்டனை அமைகிறது என்பது இக்கொள்கையாகும்.

ஒருவன் செய்த குற்றத்தால் தீங்கு அடைந்தவர் தனி நபராக இருந்தாலும், அக்குற்றம் சமூகத்திற்கு எதிரான செயலேயாகும். எனவே, சமூகம் அக் குற்றவாளிக்குத் தண்டனை அளித்து அவன் மீது வஞ்சம் தீர்த்துக் கொள்கிறது. சமூகத்திற்கு எதிராகக் குற்றவாளி இழைத்த குற்றச் செயலுக்குப் பழிவாங்கும் வகையில் அவனுக்குத் தண்டனை விதிக்கப்படுகிறது. இவ்வாறு, குற்றவாளி மீது வஞ்சம் தீர்க்கும் வகையில் தண்டனை அளிக்கப்படுகிறது.

பழிக்குப்பழி வாங்கும் தண்டனைக் கொள்கையை காண்ட், ஜே.டி. மாப்பொட் (J. D Mabbott) என்பவர்கள் ஏற்றுக் கொள்கின்றனர். காண்ட் குற்றவாளிக்கு அவன் செய்த குற்றத்திற்கு சமமான தண்டனை கொடுக்கப்படல் வேண்டும் என்கிறார். மற்ற இரண்டு கொள்கைகளையும் எதிர்த்து, செய்த குற்றத்திற்கு சமமான முறையில் தண்டனை வழங்கும் போதுதான் குற்றவாளி திருந்த இடம் உண்டு எனக் கருதினார். "கொலை செய்தவன் சாக வேண்டும்" என்ற இவரது கூற்று பழிக்கு பழிவாங்கும் தண்டனைக்கு சிறந்த அடித்தளமாக உள்ளது. ஜே.டி. மாபொட் என்பவரும் இத்தண்டனை முறையை ஆதரிக்கின்றார். இக்கொள்கை முறைதான் குற்றவாளி திருந்துவதற்கான வாய்ப்பினை அளிக்கின்றது எனவும் குற்றமிழைத்தவன் அதே குற்றத்தின் அளவு சமமான துன்பம் அனுபவிக்க வேண்டும் என்பதும் இவரது கருத்தாக உள்ளது. இதனை துன்பத்துக்குத் துன்பம் தரும் தண்டனை முறை எனவும் அழைக்கலாம். இருந்த போதிலும் ஒழுக்கவியல் இத்தண்டனை முறையை தீங்கானது எனக் கருதுகிறது. துன்பத்தை அனுபவித்தவர் பழிவாங்க நினைக்கும் வாய்ப்பை தற்காலத்தில் நீதிமன்றங்கள் இல்லாதொழிக்கின்றதை நாம் காணலாம். இங்குள்ள முக்கியமான பிரச்சினை

என்னவெனில் சமூகத்தை நிலையாக வாழ வைக்க இத்தண்டனை முறை உதவுமா?, அவ்வாறெனின் எவ்வாறு உதவும்? என்பதேயாகும். சமுதாயம் அழியாமல் இருக்க இம்முறையின் பங்கு என்ன என்பதைத் தான் நாம் அவதானிக்க
வேண்டும். இக்கொள்கையில் குறைபாடுகளும் உண்டு. அதாவது களவு எடுத்தவனை எவ்வாறு தண்டிக்கலாம், கப்பம் பெறல், கடத்தல் என்ற செயல்களுக்கு எவ்வாறு தண்டனை வழங்குவது, பாலியல் வல்லுறவு, பலாத்காரம் போன்ற செயற்பாடுகளைச் செய்தவனை எவ்வாறு தண்டிப்பது என்பது இம்முறையில் உள்ள சிக்கலாகும்.

## குற்றங்களைத் தடுத்தல் தண்டனைக் கொள்கை (Preventive Theory of Punishment)

தண்டனையால் குற்றவாளிகளுக்கு அச்சம் ஏற்படுகிறது என்பது உண்மைதான். பழிக்குப் பழி வாங்க வேண்டும் என்ற வேட்கை தணிகிறது என்பதும் உண்மைதான். எனினும், குற்றவியல் சட்டத்தின் நோக்கம் என்ன? சமுதாயத்தில் குற்றங்கள் நிகழாதவாறு தடுக்க வேண்டும் என்பதேயாகும். குற்றங்கள் நிகழாமல் தடுப்பது எவ்வாறு?

தண்டனை என்பது குற்றங்கள் நிகழ்வதைத் தடுக்கும் முறையாகவும் அமைகிறது. குற்றம் செய்த ஒருவர் மீண்டும் அக் குற்றத்தைச் செய்ய இயலாத நிலையில் வைக்கப்பட வேண்டும். திருடியவனைச் சிறையில் அடைத்தால், சிறையில் இருக்கும் வரை திருடும் வாய்ப்பு அவனுக்கு இல்லை. சிறையில் அடைக்கப்பட்டதால் ஏற்பட்ட துன்பம் அவன் மனதைத் திருத்தி மீண்டும் திருடாதவாறு தடுக் கின்றது.

நச்சுப் பாம்பை நாம் ஏன் அடித்துக் கொல்லுகிறோம்? அதை உயிருடன் விட்டால் நம்மைக் கடித்து விடும் என்பதால்தான். இந்த அடிப்படையிலேயே கொலைக்குற்றம் செய்தவனுக்குத் தூக்குத் தண்டனை விதிக்கப்படுகிறது. கொலையாளியைக்
கொன்றுவிட்டால் அவன் மீண்டும் அதே குற்றத்தைச் செய்யும் வாய்ப்பு ஏது? அவன் வாழ்ந்தால் மீண்டும் ஒரு கொலையை அவன் புரிந்து விடலாம். அது முழுதுமாகத் தடுக்கப்பட வேண்டும் என்பதற்காகக் கொலைக் குற்றவாளியின், வாழ்வே மரண தண்டனையின் வாயிலாக முடிக்கப்படுகிறது.

நல்ல பயிருக்கு ஊறு விளையாமல் தடுக்கும் பொருட்டு உழவன் களைகளை எடுத்து எறிகிறான். அதுபோல், சமுதாயம் என்ற பயிர் கேடு அடையாமல் தடுப்பதற்குக் குற்றவாளிகள் என்ற களைகள் அகற்றப்பட வேண்டியிருக்கின்றனர். இது பயிருக்குக் கேடு விளையாமல் தடுப்பதற்காகக் களையெடுப்பது போன்றதாகும். இது குற்றவாளிகளைத் தண்டிப்பதாகும். இவ்வாறு, குற்றங்களால் விளையும் கேடுகளைத் தடுக்கும் பொருட்டு தண்டனை அளிக்கப்படுகிறது.

## சீர்திருத்தல் தண்டனைக் கொள்கை (Reformation Theory of Punishment)

தண்டனை என்பது உடலை வருத்துவதாக இல்லாமல் உள் ளத்தைத் திருத்துவதாக இருக்க வேண்டும் என்ற கொள்கை தற் காலத்தில் பலராலும் ஒப்புக் கொள்ளப்படுகிறது. செய்யும் செயலைவிட அச்செயல் என்ன கருத்துடன் செய்யப்பட்டது என்பதே முக்கியமானதாகும். தீய கருத்து இன்றித் தீய செயல் எழுவதில்லை. தீய கருத்து எதனால் குற்றவாளியின் மனத்தில் தோன்றியது என்பதை அறிந்து, அத் தீய கருத்து இனி அவன் மனத்தில் தோன்றாதவாறு செய்தல் வேண்டும். இதுவே தண்டனையின் நோக்கமாக இருக்க வேண்டும் என்பதை உளவியலாளர்கள் பலரும் வற்புறுத்திக் கூறுகின்றனர்.

உள்ளத்தில் நோயுள்ளவர்களின் செயலே பிறருக்கு நோயை விளைவிக்கிறது. மாசற்ற மனத்திலே மறுவுற்ற எண்ணங்கள் உதிப்பதில்லை. தூய உள்ளத்தில் தீய கருத்துகள் தோன்றுவதில்லை. அழுக்காறு, அவா, வெகுளி முதலிய தீய குணங்களால் மனம் பீடிக்கப்பட்டிருக்கும் பொழுதுதான் தீச்செயல்கள் எழுகின்றன. எனவே, குற்றவாளிகளில் பெரும்பாலானோர் நோயுற்ற மனத்தோடு உள்ளவர்கள். உடல் நோயுள்ளவர்களுக்கு நாம் மருந்து கொடுத்துக் குணப்படுத்துகிறோம். அதுபோல் உள நோயுள்ள குற்றவாளிக்கு அளிக்கப்படும் தண்டனை அவர்களுடைய உள்ளத்தைக் குணப்படுத்தித் திருத்த வேண்டும். தண்டனையின் குறிக்கோள் குற்றவாளியின் உடலை வருத்துவதாக அன்றி, அவன் உள்ளத்தைத் திருத்துவதாக அமைதல் வேண்டும்.

குற்றவாளிகள் அனைவரும் கொடியவர்கள் என்று கூறுதல் தகாது. சாதாரணமாக, நல்ல உள்ளம் படைத்தவர்களும் சூழ்நிலைகளின் காரணமாகக் குற்றங்களைச் செய்து விடுகின்றனர். வறுமையால் வாடுவோரும், வஞ்சினத்தால் சாடுவோரும் தன் நிலை தடுமாறிக் குற்றங்களை இழைக்கின்றனர். பேராசை என்ற சுழலால், அழுக்காறு என்ற அடுக்காத எண்ணத்தால் மதிமயங்கி ஈனச் செயல்களிலே இறங்கி விடுகின்றனர். அழுக்காறு, அவா, வெகுளி முதலிய தீய குணங்கள் நம் எல்லோரிடமும் ஓரளவு இருக்கின்றன. இவையில்லாத அருங்குணம் படைத்தவர்களை உலகத்தில் காண்பது அரிது. எனவே, தொற்றுநோய் உள்ளவர் களைக் கண்டு நாம் தூர விலகுவதுபோல், குற்றவாளிகளைக் கொடியவர்கள் என்று விலக்குவது முறையன்று.

குற்றவாளிகளின் மனதை மாற்றிச் செம்மைப் படுத்துவதற்கான முயற்சிகள் எடுப்பது அவசியமாகிறது. குற்றம் புரிந்தவர்களும் நாட்டின் குடிமக்கள் சமுதாயத்தின் உறுப்பினர்கள். நலிந்த உள்ளத்தால் நன்மை எது, தீமை எது என்று அறியாத நிலையில் உள்ளவர்கள். உடல் மெலிந்தால் ஊட்டம் கொடுக்கிறோம். அது போல் உள்ளம் நலிந்தால் அதற்கான ஊக்கம் அளிக்க வேண்டும். நோயுற்ற உடலை மருந்து எவ்வாறு குணப்படுத்துகிறதோ அவ்வாறே

குற்றவாளியின் நோயுற்ற மனதைச் சீர்படுத்தும் முறையில் நாம் முயலுதல் வேண்டும்.

உடலை வருத்துவதால் மட்டும் உள்ளம் திருந்துவதில்லை என் பதைக் காணுகிறோம். திருடிய குற்றத்திற்கெனச் சிறைத்தண்டனை பெற்றவர்கள், விடுதலை பெற்றவுடன் மீண்டும் திருடுகின்றனர். பத்து முறை, பதினைந்து முறை திருடிச் சிறை சென்றவர்கள் பலருண்டு. எனவே, சிறைவாசம் அவர்களைச் சீர்திருத்தவில்லை என்பது தெளிவு. ஆதலால், குற்றவாளிகளின் உள்ளத்தை உயர்த்துவதே உரியதொரு மாற்றாகும்.

ஒழுக்கத்தின் உயர்வைக் குற்றம் புரிந்தோர்களுக்கு உணர்த்த வேண்டும். அழுக்காறு என்பது ஒரு பாவி, சினமென்பது சேர்ந்தாரைக் கொல்லி என்ற அறநெறி உண்மைகளை ஒருவன் உணர்ந்து கொண்டால், ஒழுக்கும் அவன் உள்ளத்தில் நிலைத்து நிற்க ஏதுவாகும்.

தாம் செய்யும் குற்றச் செயல்கள் எவருக்கும் தெரியாது போய் விடும் என்ற துணிவால் சிலர் தீச்செயல்களில் இறங்குகின்றனர். பிறரறியா வகையில் நாம் ஒன்றைச் செய்யலாம் ஆயினும், நம் மனமறியா வகையில் நாம் அதைச் செய்ய இயலாது. நம் மனத்திலே மறைந்துள்ள மனச்சான்று, நம் உள்ளத்தில் உறைகின்ற அந்த உயரிய செம்பொருள், நாம் செய்வதனைத்தையும் அறியும் என்ற அறிவு நமக்கு வந்துவிடில், 'பிறரறியார் நம் செயலை' என்ற பேதமை நீங்கிவிடும். அவரறிவார் அனைத்தையுமே என்பதே மெய்யறிவு, இந்த மெய்யறிவு மிகுந்து விடில் ஐயுறுதல் அகன்றுவிடும். இவ்வாறு, மனநோயுள்ள குற்றவாளிகளுக்கு மெய்யறிவைப் புகட்ட வேண்டும்.

பிழைப்பதற்கு வழியின்றிப் பெருங் குற்றங்கள் செய்வோர் பலர். அவர்கள், கையால் தொழில் செய்து கண்ணியமாக வாழ்வதற்குக் கைத்தொழில்கள் பலவற்றைக் கற்பித்தல் நலமாகும். சமூகத்தினர் நம்மைச் சரியாக மதிப்பதில்லை என்றதோர் ஏக்கத்தால் குற்றம் புரிவோர் சிலர். சமுதாய வாழ்வில் அவர்களுக்குத்தக்கதோர் இடங்காட்டி நல்வாழ்வில் அவர்களை நாட்டமுறச் செய்தல் வேண்டும்.

இந்த முறையில், தண்டனை, அச்சுறுத்துவதாக மட்டுமன்றி அறிவுறுத்துவதாகவும், பழிவாங்குவதாக மட்டுமன்றிப் பண்பூட்டுவதாகவும் அமைகிறது. இதுவே குற்றவியல் சட்டத்தின் குறிக்கோளுக்கு உகந்ததாகும். உடலை வருத்தும் ஒறுத்தல் முறை, உள்ளத்தைத் திருத்தும் உயர்ந்த முறையாக மாறுகிறது. தண்டனை என்பது நீதியோடு கருணையும் நிலவி நிற்கும் செயலாக ஒளிர்கின்றது. இவ்வாறு, குற்றவாளியைச் சீர்திருத்தும் அடிப்படையில் தண்டனை அமைய வேண்டும்.

இக்கொள்கையானது வளர்ச்சி அடைந்த நாடுகளிலும் இலங்கை போன்ற வளர்முக நாடுகளிலும் காணப்படுகின்றது. இக் கொள்கை அமுலாக்கல்கள் நாடுகளுக்கிடையே வேறுபடலாம். குற்றம் புரிந்தவனை சீர்திருத்த நினைக்கும் பலரும் குற்றவாளி தண்டனைக்கு உள்ளாக்குவதை எதிர்க்கிறார்கள். குற்றம்

செய்தவர்கள் திருந்தி வாழ்வதற்காக செயற்படுவதை வலியுறுத்துகின்றார்கள். இங்கு திறந்தவெளிச் சிறைச்சாலைகள் அமைக்கப்பட்டு சீர்திருத்தம் நடைபெறுகின்றது. நன்னடத்தை நிலையங்கள், பெண்கள் நன்னடத்தை நிலையங்கள், சிறுவர் நன்னடத்தை நிலையங்கள் என்று சீர்திருத்தம் நடைபெறுகின்றது. இங்கு குற்றவாளியை சீர்திருத்துதல் என்ற வகையில் அவனை மன்னிப்பது, அவனுக்கு கல்வியறிவு புகட்டுவது அன்பாக நடந்து கொள்வது, சிறைச்சாலையில் போதிய சௌகரியம், தண்டனைக் குறைப்பு போன்றவற்றை சீர்திருத்தக் கோட்பாட்டாளர்கள் ஏற்றுக் கொள்கின்றனர். குற்றவாளிக்கு என்ன தண்டனை வழங்க வேண்டும் என்பதில் அக்கறை கொள்ளாமல் அவர் குற்றம் செய்ததற்கான காரணத்தை ஆராய்வதிலும், குற்றவாளிக்கு எவ்வாறான சலுகைகள் செய்து கொடுக்க வேண்டும் என்பதிலும் அக்கறை கொள்கின்றது. பொதுவாக இக்கொள்கை குற்றம் செய்தவனை தண்டனை வழங்குவதன் மூலமாக திருத்த முடியாது என்ற அடிப்படையை கொண்டு எழுந்ததேயாகும் (ஜமாஹிர், 2012:ப,108-110).

இங்கு உடல் ரீதியான துன்பம் ஏற்படாவிட்டாலும் அவன் திருந்துவதற்கு உளரீதியான துன்பம் ஏற்படுகின்றது. சிறைவாழ்வு, அதாவது சிறையில் அடைபடுவது, தனிமை, எதிர்கால வாழ்வு, தனது சுதந்திரம், ஆசைகள், போன்ற பல விடயங்கள் அவனுள் மாறாத காயத்தை உண்டு பண்ணும். இதன் மூலமாக குற்றவாளி திருந்துவதற்கான வாய்ப்புகள் உள்ளது. குற்றம் செய்து தப்பிக் கொள்ள முயற்சிக்கலாம் என்பதும் குறிப்பிடத்தக்கது. இங்குள்ள பிரதான பிரச்சினை என்னவெனில் குற்றவாளிக்குத் தண்டனை வழங்காததால் அவனை சிறப்பாக பராமரிக்கப்படுவதா? என்பதாகும். சிறப்பாக குற்றவாளியை பராமரிப்பது என்பது தான் இக்கொள்கையாகும்.

அச்சுறுத்துவது, பழிவாங்குவது, குற்றங்களைத் தடுப்பது, சீர் திருத்துவது என்ற நான்கு வகைக் கொள்கைகளின் அடிப்படையில் தண்டனை முறை இயங்குகிறது.

இவை ஒவ்வொன்றும் முரண்பட்டவை அல்ல, குற்றவாளியைச் சீர்திருத்த வேண்டும் என்ற ஓரே நோக்கத்துடன் தண்டனை அளிக்கப் படுவதில்லை. கொலைக் குற்றவாளியைத் தூக்கிலிட்டபின் அவனைச் சீர்திருத்தும் பிரச்சினையே எழுவதில்லை. கொலையாளிக்கு அளிக்கப்படும் தூக்குத் தண்டனை பிறரை அச்சுறுத்துவதாகவும், கொலையாளியைப் பழி வாங்குவதாகவுமே அமைகிறது. ஆனால், சிறிய குற்றங்கள் செய்தோரைச் சீர்திருத்த வேண்டும் என்ற நோக்கத்துடன்தான் சிறையில் அடைக்கின்றோம். எனவே, அச்சுறுத்துவதோடு அறிவுறுத்துவதும், பழி வாங்குவதோடு பண்பூட்டுவதும், தண்டனை முறையின் கொள்கைகளாக அமைகின்றன. (சண்முகசுப்பிரமணியம்,1995:ப142-148)

## முடிவுரை

குற்றங்களைப்பற்றிய தெளிவை மனிதகுலம் மேலும் மேலும் அடைவதையே மனித நாகரீகத்தின் பரிணாமம் எனலாம். சமுதாயத்திற்குத் தீங்கு விளைவிக்கக் கூடிய வகையில், சட்டத்திற்குப் புறம்பாகத் தனிமனிதனுக்கோ, சமுதாயத்திற்கு எதிராகவோ செய்யப்படுவது குற்றம் எனப்படும். மற்றும் நீதிமுறைக்கு எதிராகச் செய்யப்படுபவை எல்லாம் குற்றங்களாகின்றன.

சட்டப்படியான கடமைகளைச் செய்வது குற்றமாகாது. பொதுவாகக் குற்றம் பெருக முக்கிய காரணமாக, படிப்பறிவு அதிகமில்லாத சமூகம், படித்திருந்தாலும், உலக அனுபவம் எதுவுமில்லாத இளைய சமுதாயம், பெருகி வரும் வேலையில்லாத் திண்டாட்டம், குற்றத்தினை மறைத்துத் தப்பித்துக் கொள்ளுதல், குறைந்த தண்டனை போன்றவற்றைக் கூறலாம்.

குற்றம் பெருக மற்றுமொரு முக்கியமான காரணம் சமூக அக்கறையின்மையே என்று கூறலாம். குற்றத்தில் ஈடுபடுபவன் தொடர்ந்து குற்ற ஈடுபாடு உடைய வனாகவே காணப்படுகின்றான் என்பது விளக்கப்பட்டுள்ளது. குற்ற மன்ப்பான்மை கொண்டவர்கள் பதற்றத்துடன், முறைகேடாக சுவாசிக்கும் இயல்பும் பெற்றவர்களாக இருப்பார்கள். மேலும் தண்டனைக்குப் பதிலாக நோய் தீர்க்கும் முறை ஒன்றை நடைமுறைப்படுத்த வேண்டுமென உளமருத்துவர்களும் சமூக வி:ஞ்ஞானிகளில் சிலரும் கூறுகின்றார்கள். சட்ட மெய்யியலாளர்கள் தண்டனையை நியாயப்படுத்த முடியும் என்றும், ஆனால் தண்டனை வழங்குவதற்கு என்று உருவாக்கப்படும் அடிப்படைத் தளங்களைப் பற்றி அபிப்பிராய பேதங்கள் உண்டென்றும் கூறுகின்றார்கள். மெய்யியலானது உள மருத்துவம் மற்றும் சமூக விஞ்ஞானக் கூற்றுக்களில் தங்கி இருக்க வேண்டியதில்லை. தண்டனையை நிராகரிப்பதோ அல்லது ஆதரிப்பதோ என்பதல்ல. ஆனால் தண்டிப்பதில் எழும் ஒழுக்கப் பிரச்சினைகள் என்ன? தண்டனை ஏன் அவசியம் அது நியாயப்படுத்தப்படக் கூடியதா? என்பன பற்றி ஆய்வு செய்வது ஒரு மெய்யியலாளனுக்குரிய பணி எனக் கருதலாம்.

## உசாத்துணை நூல்கள்


Bhardwaj, (2001), *Crime Criminal Justice and Human Rights*, Delhi: Konark Publishers pvt. Ltd.

Carl Elliott, (1996), *The rules of insanity: moral responsibility and the mentally ill offender,* SUNY Press.

*Dubber, Markus D. (2002). Criminal Law: Model Penal Code. Foundation Press.*

Elizabeth A. Martin, ed. (2003). *Oxford Dictionary of Law*. Oxford: Oxford University Press.

Garr, K.D, (2002), *Criminal law and criminology*, Deep & Deep Publication, New Dhili.

Narashmen, R.K, (1999) *Human Rights and Social Justice*, Commen wealth Publishers,New Delhi.

அனஸ்,எம்,எஸ்,எம், (2003), *மெய்யியல் அறிமுக உரைகள்*, பேராதனை: பண்பாட்டு வட்டம்.

சண்முக சுப்பிரமணியம் .மா, (1995), *குற்ற இயல் சட்டம்*, சைவ சித்தாந்த நூற் பதிப்புக் கழகம் லிட்.

சண்முகசுந்தரம், (1988), *நம் பண்டைய நீதி நடைமுறைகள் (சட்ட விளக்கம்)*, சென்னை: கலைக் கருவூலம்.

ஜமாஹிர், பீ. எம், (2012) *ஒழுக்கவியல் : ஓர் அறிமுகம்*, கண்டி: ஈஸ்வரன் புக் டிப்போ.

சிங்காரவேலனார், (2001), *குற்றமும் தண்டனையும்*, சென்னை: கமலா பதிப்பகம்.

சேதுராமன்.ஜி, (1981), *தமிழ்நாட்டு சமுதாய பண்பாட்டுக் கலை வரலாறு*, சென்னை:ஜெ.ஜெ பப்ளிக்கேசன்ஸ்.

கிருட்டிணன்.அ, (1992), *தமிழர் பண்பாட்டியல்*, சென்னை: மணிவாசகர் பதிப்பகம்.

பொன்பரமகுரு, (1999), *தண்டனையியல்*, சென்னை: பூம்புகார் பதிப்பகம்.

(A version of this paper presented at 8th International Symposium – 2018, South Eastern University of Sri Lanka)